PUDUKKOTTAI INFORMATION

புதுக்கோட்டைச் செய்தி



Vol. 1.

மலர் 1.

Monday, the 15th March, 1948.

ஸர்வஜித்து௵ பங்குனி௴ 2௳ திங்கட்கிழமை.

No. 8.

இதழ் 8.

NO RATION ON ENTERTAINMENTS.



WORLD FAMOUS EKCO RADIOS!

ONLY LIMITED STOCK JUST ARRIVED !!

BOOK YOUR ORDER ATONCE TO AVOID DISAPPOINTMENT.

EKCO

6 Valves A. C. Band Spread	Price	Rs. 660.
4 ,, Round Cabinet	,,	Rs. 475.
5 ,, A. C., D. C. Bedroom model	,,	Rs. 395.
5 ,, 4 Volt Battery set	,,	Rs. 560.
5 ,, Car Radio (6 Volts)	,,	Rs. 620.
PEOPLES SET 3 Valves A. C. (Only Trichy) with complete aerial things	,,	Rs. 110.

Sole distributors for Pudukkottai State:—

SUCCESS RADIO SALES & SERVICE,

East Main Street, Pudukkottai.

SPECIALISTS IN ALL KINDS OF RADIO SERVICE.

மதுரை

மெர்கண்டைல் பாங்க் லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
மதுரை.

புதுக்கோட்டை ஆபீஸ்,
கீழ 2-ம் வீதி.

பிராஞ்சுகள்:-சென்னை (128, கமினியப்ப நாயக்கன் செரு, பி. டி.) தல்லாகுளம் (மதுரை), புதுக் கோட்டை, அருப்புக்கோட்டை, சிவகாசி, பரமக்குடி, திண்டுக்கல், திருமங்கலம் அண்டு காஞ்சீபுரம்.

ஸ்ரீ ராவ்பகதூர்

***K. M. S.* லெக்ஷ்மணய்யர்—சேர்மன்.**

செலுத்தப்பட்ட முதைனம்	...	**ரூ. 5,00,000.**
ரிஸர்வ் நிதி	...	**ரூ. 50,000.**

நடைமுதல் ரூ. 80,00,000-க்குமேல் கரண்ட் அக்கவுண்ட் வட்டி ரேட் ½% சேவிங்ஸ் பாங்க் கணக்குகளுக்கு 2½% வீதம் வட்டி கொடுக்கப்படுகின்றது.

சிசன் டிபாசிட்டுகள் 6—9 மாசஙகளுக்கு 3% வட்டி விகிதம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

S.* வெங்கடராமன், *B. Sc. (com.)
***C. A. I. I. B.*, காரியதரிசி.**

K. பிரணநார்த்தி, ஏஜண்ட், புதுக்கோட்டை.

புதுக்கோட்டைச் செய்தி

மாத வெளியீடு

பிரதி இங்கிலீஷ் மாதம் 15உ
வெளிவரும்

சந்தா விபரம்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 3.
தனிப்பிரதி விலை அணா 4.

பப்ளிஸிடி ஆபீஸர்,

புதுக்கோட்டை.

குளிர்ந்த

பானங்களுக்கும்

தேவி
கூல்டிரிங் ஸ்டால்

கீழ ராஜ வீதி. ※ புதுக்கோட்டை.

ஸ்டேஷனரி
சாமான்களுக்கும்

சிறந்த இடம்



'ஸல்பஸ்' (SULFAZ) ரேடியோ

5 வால்வ் *A. C.*

மற்றும் ரேடியோ சாமான்கள்
ஒலிபெருக்கிக் கருவிகள்
வாங்குவதற்கும் ரிபேர்கள் செய்வதற்கும்

ராம் ரேடியோ சர்வீஸ்

கீழ ராஜ வீதி. புதுக்கோட்டை.

வாஸனை மிக்க

வாஸன் காப்பிப் பவுடரை

வாங்கி அருந்தி

வாழ்க்கையில் இன்புற வாழுங்கள்.

◎

வாஸன்ஸ் காபி & டீ

Pro - Moorthy & Co.,

கீழ ராஜ வீதி. புதுக்கோட்டை.

புதிய சரக்குகள்! பலவித தினுசுகள் !!

புதுக்கோட்டை

கோவாபரேடிவ் ஸென்ட்ரல் க்ளாத் டிப்போ.

ஸமஸ்தானத்திற்கு மில் துணிகளையும் நூல்களையும் வரவழைத்து விநியோகிக்க உரிமைகொண்டது.

இந்தியக் கம்பளிப் போர்வைகளும்

ஸ்திரீகளுக்குகந்த பட்டு தினுசுகளும் கிடைக்கும்.

6 கெஜ பட்டுச் சேலைகள் ரூ 36-லிருந்து கிடைக்கும்.

விபரங்களுக்கு:—

எங்கள் வியாபார ஸ்தலத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

FOR THE

BEST ELECTRICAL GOODS AND NOVELTIES, MACHINERY

AND

RADIOS

ENQUIRE AT

M/s. THE KARTIKEYAS LTD.,

ELECTRICAL ENGINEERS,

EAST MAIN STREET,

PUDUKKOTTAI.

ராம் பிரதர்ஸ்

பேப்பர் வியாபாரிகள்

கீழ ராஜ வீதி. ❖ புதுக்கோட்டை.

(Paper suppliers to the Govt. of Pudukkottai.)

எங்களிடம் எல்லா விதமான
பேப்பர்களும் ஸ்டேஷனரி சாமான்களும்
கிடைக்கும்.

பத்திரிகைகளுக்குத் தேவையான
நியூஸ் பிரிண்ட் பேப்பர்களும் கிடைக்கும்.

THE PUDUKKOTTAI MERCHANTS' BANK LTD.,

(Incorporated in Pudukkottai State under the Indian Companies Act, 1913.)

PURELY PUDUKKOTTAI CONCERN!

(Estd. 1947.)

PUDUKKOTTAI.

SHARE HOLDERS, SUBJECTS OF THE STATE!!

BOARD OF DIRECTORS.

Messrs.

1. R. S. Manikkam Pillai, *Chairman.*
2. Hajee K. L, K. S. Muhamed Moideen Rowther.
3. M K. Ganapathy Pillai.
4. M. S. Noor Muhamed Rowther.
5. M. S. Narayanaswamy Pillai.

Messrs.

6. N. Muniandi Pillai.
7. M. A. Veerappa Chettiar.
8. M. A. Palanivelu Pillai.
9. P. V. R. M. Kulandayan Chettiar, M. L. C
10. K. M. N. Kumarappa Chettiar.
11. M S. Ganapathy Pillai, M. L. C., *Managing Director.*

T. R. Gopala Ayyar, B. A., B. L., *Secretary.*

ALL kinds of banking business undertaken.
ATTRACTIVE TERMS!

For particulars apply to.—

THE SECRETARY.

தந்தி : PICO. THE PICO LTD. தபால் பெட்டி No. 10.

உற்பத்திகள்.

- நயம் எக்ஸ்பெல்லர், கடலை எண்ணை, பிண்ணாக்குகள்.
- கைத்தறி, கெட்டிச் சாயசேலை, வேஷ்டி, துண்டு, விரிப்புகள்,
- பிகோ காரேஜ், மோட்டார் ரிப்பேர், ஸ்பிரே பெயிண்டிங், பாட்டிரி சார்ஜ், எலெக்டிரிக் வேலை, இயந்திர தொழிற் சாலை.
- ட்ரான்ஸ்போர்ட் "மோட்டார்" ஏற்றுமதி சேவை,
- இன்ஷூரன்ஸ் எல்லாவகை இன்ஷூரன்ஸூம் செய்து கொடுக்கப்படும்,

தங்கள் ஆதரவை பெரிதும் விரும்புகிறோம்.

புதுக்கோட்டை இன்டஸ்ட்ரியல்
கார்பொரேஷன் லிமிடெட்,

லெக்ஷ்மணபுரம்,
புதுக்கோட்டை.

'GIDIA BUILDINGS'

EAST MAIN STREET, PUDUKKOTTAI.

A buyer's opportunity to discover the wide range of products manufactured in Pudukkottai.

All types of :—

Household equipment furniture.
Clothing,
Jewellery,
Silverware,
Diamonds,
Precious Stones,
Gold ornaments of various designs and other light industries.

Awaiting your kind visit to our showrooms in East Main Street, Pudukkottai.

GIDIA INDUSTRIES LTD.,

PUDUKKOTTAI INFORMATION

"நயன் ஈன்று நன்றிபயக்கும் பயன் ஈன்று
பண் பிற்றலைப் பிரியாச்சொல்."

Monday, the 15th March 1948.

Rates of subscription

Rs. 3 a year.
As. 4 a copy.

சந்தா விபரம்.

வருஷம் 1-க்கு ரூபாய் 3.
தனிப்பிரதி அணா 4.



HIS HIGHNESS SRI BRIHADAMBA DAS
RAJA RAJAGOPALA TONDAIMAN BAHADUR, RAJA OF PUDUKKOTTAI.

MERGER

Pudukkottai has merged with the Indian Union.

The Ministry of States wired to His Highness requesting him to go to Delhi for consultations on February 29.

His Highness left Madras by plane on the 28th.

His Highness met Sirdar Patel on the 1st March. He also met Mr. V. P. Menon.

His Highness agreed to the merger of Pudukkottai with the Indian Union.

On Wednesday, March 3, at 11.45 hrs. a Darbar was held in the Town Hall. Mr. V. V. Subramanian, I.C.S., Collector of Trichinopoly, presided. The Dewan, all Heads of Departments, other officials and non-officials were present.

The Collector announced that His Highness had agreed to merge the State with the territories of the Indian Union and that he had taken over on behalf of the Government of Madras.

The Darbar then dissolved.

On March 4, a statement issued by His Highness appeared in the Press. His Highness said that Sirdar Patel had emphasised the advantages of merger and strongly advised him to agree to it and that he had to accept the advice. He called on the people of Pudukkottai to co-operate whole-heartedly with the Indian Union.

His Highness, who returned to Madras on the 3rd, proceeded to Kodaikanal on the 5th.

NOTES OF THE MONTH

Pudukkottai has been merged with the Indian Union. The administration is now being carried on by Mr. C. Karunakara Menon, under the Government of Madras.

❖ ❖ ❖ ❖

Mr. V. N. Kudva, I. C. S., First member of the Board of Revenue came here on the 4th to consider the steps to be taken to implement the merger. He met all the Heads of the Departments and leading non-official gentlemen. He listened to the views presented to him as to the best mode of preserving the territorial integrity of Pudukkottai. The legal implications of merger and the question of judicial administration during the period of transition—whatever its length—were the subject of discussions with Mr. P. Ramalingam, I. C. S., who came here on the 7th. He met the Judges and the members of the Bar.

❖ ❖ ❖ ❖

The merger of the State with the Indian Union involves the disappearance of a State which has its roots in the past. Pudukkottai has been noted for its beneficent and well-run administration. His Highness the Raja, who is one of the most self-less and broad-minded of men has been speeding Pudukkottai up in the path of responsible government. One cannot but recall the testimony of Sardar Patel who not long ago wrote to His Highness congratulating him on his "foresight and concern for the welfare of his subjects."

The people of Pudukkottai can never forget His Highness, whose gentleness and loving concern for the well-being of his people had won all hearts.

❖ ❖ ❖ ❖

The Hon'ble the Minister for Prohibition, Mr. Daniel Thomas, visited Pudukkottai on the 15th. He met a large number of officials and non-officials in conference. His purpose was to consider the steps to be taken for the early introduction of prohibition. He said, that he was greatly pleased to meet the people of Pudukkottai which was one of the best-administered areas in the country. He was sure that the merger which had taken place would enure to the mutual advantage of India and Pudukkottai.

MAHATMA GANDHI

Mr. Henry S. L. Polak writes :—

The loss of Mahatma Gandhi is a tragic one to all throughout the world who held him in respect and affection, and not least to those who had been privileged to collaborate closely with him. But that which was Gandhi in essence is Gandhi for all who cherish his memory and are determined to the extent of their capacity to carry out his teachings.

They are of universal value. If we have the courage to convert apparent disaster into spiritual conquest, we shall have attained the end that he longed for, and India will make the great contribution that will help to regenerate an erring humanity and raise it to heights yet unknown.

Danes Inn House,
Strand, London.

Note.—Mr. Polak was a co-worker of Mahatmaji in South Africa and was in prison with him.

Mrs. T. Nallamuthu Ramamurthi (*Principal, Queen Mary's College, Madras*) writes :—

No ordinary person can easily assess the significance of Mahatma Gandhiji's personality and I do not pretend to be more than an ordinary citizen.

To our country, he, more than any other, brought Independence after a long and unique peaceful struggle.

To the world, he has given a Message. Buddha 'the enlightened one' and Jesus Christ, had no doubt taught that only "Love can conquer hatred". But their teaching was for the individual. It was Gandhi who first taught the use of "Love and Sathyagraha" as between nations;—a lesson, essential to be learnt for human Survival, in this age of the Atomic Bomb. It is now, our duty to dedicate ourselves to the cause for which he lived and gave up his life.

Mr. F. G. Natesa Ayyar writes :—

Simple and innocent as a child, love, tenderness and generosity personified, stern and unrelenting in the pursuit of truth and justice, clean in thought, word and deed, a teacher of profound principles which he practised before he taught, hugging the whole of humanity, irrespective of caste, creed or race in his fond embrace, austere, chaste, selfless, chivalrous and brave, undaunted in treading the path of suffering, alone and single-handed, challenging the might of the mightist, never counting the cost and not caring for result, with God alone for his guide, philosopher and friend, Mahatma Gandhi was truly a divine personality—a true avatar of God on earth. His sublime and saintly life—a life of perfection—and his martyrdom have opened the eyes of this distracted world to a realization of the futility of violence as a remedy to end evils and that truth, love and *ahimsa* alone will make the world happy and fit to live in. History has no parallel to this great and holy man of God and his magnificent achievement in the realm of thought and action in a century steeped in materialism, selfishness and force and to the universal homage paid to his memory by people high and low, big and small, of all races and creeds and of all countries in the world.

Mr. Bernard Shaw

"It shows how dangerous it is to be too good".

Dr. Radhakrishnan

"………The incredible, the inconceivable, has happened. That this purest, most elevating, most inspiring man of our age should have suffered by a mad man's anger shows that we have not improved since the days of Socrates, who had to drink hemlock, or Jesus, who was put on the Cross.

Mahatma Gandhi, the lonely symbol of a vanishing past, is no more. We have killed his body, but the light in him, which is from the divine flame of Truth and Love, cannot be put out………".

RAJA MARTANDA BHAIRAVA TONDAIMAN

Lord Halifax

"………No one has tried to serve India with greater devotion, and his friends in India and elsewhere will only hope that the lesson and effect of his tragic death may be to bring all his countrymen to understand and practise the principles that he so constantly and faithfully preached.

"I suppose there can be few men in all history who, by personal character and example, have been able so deeply to influence the thought of their generation."

Dr. Fisher (*Archbishop of Canterbury.*)

"………He devoted his life to win men from violence to peace and brotherhood. Fanaticism and hatred have now made him a martyr to that cause."

Mr. Jinnah

"………Whatever our political differences he was one of the greatest men produced by the Hindu community and a leader who commanded their universal confidence and respect.

I wish to express my deep sorrow and sincerely sympathise with the great Hindu community and his family in their bereavement at this momentous, historical and critical juncture so soon after the birth of freedom for Hindustan and Pakistan. The loss to the Dominion of India is irreparable and it will be very difficult to fill the vaccuum created by the passing away of such a great man at this moment."

Sri. O. P. Ramaswami Reddiar

"………Gandhi was a great *Karma Yogi* who lived among men, learnt their sorrows and difficulties, and by his teaching and example brought light to them, and led them to Godhead with the hand of a loving father. It was a matter for shame and sorrow to all of them that such a great and good man was killed by an Indian. Gandhiji was the truest representative of Hinduism, and the embodiment of the highest ideals of life taught by all religions. His life was an example of the human soul striving ceaselessly to be attuned with the Supreme Being."

Dr. Henry F. Grady (*American Ambassador to India.*)

"………Like any great man, he does not belong to India alone. He belongs to all of us, everywhere and the one consolation we can take from this great tragedy is that his influence and the force of his spiritual personality will be greater now than they were when he lived. As with the death of other great men, the world can pay tribute to his memory only by striving to imitate his virtues. We can all renew our devotion to peace and brotherhood among men; we can all strive to remove bitterness and hatred towards our fellowmen from our hearts: we can, with renewed fervour, dedicate ourselves to the kind of world of which he dreamed and which he sought to be realised. All differences between men and nations can be reconciled. If the spirit is there, the way can always be found. As our own great martyr to world peace, Franklin Roosevelt said on one occasion, "It is the spirit, Sir, that matters". It is the spirit of Mahatma Gandhi, his ideals and dedication to peace everywhere—a peace based on the love of man for man that matters".

Professor Albert Einstein (world-famous scientist) has written as follows on the seventy-fifth birth day of Mahatma Gandhi.

"A leader of his people, unsupported by any outward authority; a politician whose success rests not upon craft nor mastery of technical devices, but simply on the convincing power of his personality; a victorious fighter who has always scorned the use of force; a man of wisdom and humility, armed with resolve and inflexible consistency, who has devoted all his strength to the uplifting of his people and the betterment of their lot; a man who has confronted the brutality of Europe with the dignity of the simple human being and thus at all times risen superior. Generations to come, it may be, will scarce believe that such a one as this ever in flesh and blood walked upon this earth."

Mr. C. E. M. Joad, M. A., D. Litt. (*Birkbeck College, University of London*).

(The Authority of Detachment and Moral Force).

.........One of the best definitions of a man of genius is he who, in Shelley's words, "beholds the future in the present, and his thoughts are the germ of the flower and fruit of latest time." To put the point biologically, the genius is an evolutionary "sport" on the mental and spiritual plane, designed to give conscious expression to life's instinctive purpose. He represents, therefore, a new thrust forward on the part of life and destroys the prevailing level of thought and morals as surely as he prepares for a new one. The thought of the community as a whole presently moves up to the level from which the genius first proclaimed his disintegrating message, and we have the familiar historical spectacle of the heterodoxies of one age becoming the platitudes of the next.

It is in this sense that Gandhi is a moral genius. He has announced a method for the settlement of disputes which may not only supersede the method of force, but, as men grow more powerful in the art of destruction, must supersede it if civilization is to survive. No doubt his method has for the moment failed; no doubt he has promised more than he can perform, but if men had never promised more than it was possible for them to perform, the world would be the poorer, for the achieved reform is the child of the unachieved ideal. Because Gandhi has believed, he is himself believed, and his authority in the world, though unbacked by force, is greater than that of any other man.

Don Salvador De Madariaga, M. A., (*London*).

(The Need of a Life instilled with Unity).

.........In its essence, therefore, the problem of our day is less in the doing than in the being. We need not act differently; we must become different. Such is the evolution we must set going if we are to change the world—as change it we must, or else it die, and we with it.

Two conditions must be fulfilled towards this aim—that the trend of the evolution become clear and conscious in the leading men of the universal society; and that the sense of it be conveyed to vast fields of human life. The first is a slow process, predominantly, but by no means solely, intellectual. We are witnessing it under our own eyes all over the civilized world, including, despite appearances, the totalitarian countries. The second is more difficult, because the living sense of things can only be conveyed by life: a life instilled with unity is needed to convey the living sense of unity to others. Such a life is Gandhi's. And that is why the Mahatma is perhaps the most symbolic man of our day, for he is not so much a man of action or a man of thought as a man of life.

Yone Noguchi (*Keio University, Tokyo, Japan.*)

(A Visit from the Far East).

.... A warrior in combat near Heaven with a prospect
of unseen victory,
Blowing a bugle that rings to the last gulf of Hell,
A lonely hero challenging the future for response.
Withered and thin,
But with a mammoth soul shaking the world in fear—
Through this man love, profaned and ignored,
Through this man life's independence, shattered and fallen,
Through this man, body-labour bereft of honour and prize,
Cry rebel-call against tyranny; to God's justice he praise!
A sad chanter of life close to the mother-earth,
(Where is there a more burning patriot than this man?)
A lone seeker of truth denying the night and self-pleasure,
(Where is there a more prophetic soul than this man's?)
A pilgrim along the endless road of hunger and sorrow.

Mr. Romain Rolland (*Villa Olga, Villeneuve, Switzerland.*)

(Homage from a Man of the West to Gandhi).

.........For many, he was like a return of Christ. For others, for independent thinkers, disturbed by the disordered movement of the civilization of the West, whose direction was no longer governed by any moral principle, and whose marvellous genius of discovery and invention is monstrously distorted towards its own ruin, Gandhi was a new incarnation of Jean-Jacques Rousseau and of Tolstoy, denouncing the illusions and the crimes of civilization, and preaching to men the return to nature, to the simple life, to health. Governments pretended to ignore and despise him. But the peoples felt him to be their best friend and their brother. I have seen here, in Switzerland, the pious love that he inspired in humble peasants of the countryside and the mountains. May the spirit of Gandhi, as aforetime that of the great founders of the Christian orders, of St. Bruno, of St. Bernard, of St. Francis, maintain, among the raging torments of the age of crisis and of transformation which the human race is traversing, the *Civitas Dei*, the love men, harmony !

Sri. Rabindranath Tagore (*Santiniketan, Bolpur, Bengal.*)

(The Poet's Verdict.)

.........When Mahatma Gandhi came and opened up the path of freedom for India, he had no obvious medium of power in his hand, no overwhelming authority of coercion. The influence which emanated from his personality was ineffable, like music, like beauty. Its claim upon others was great because of its revelation of a spontaneous self-giving.

FOOD SITUATION IN PUDUKKOTTAI

I

FOR THE FIRST FORTNIGHT OF FEBRUARY, 1948.

I. *Weather condition and crop prospects* :—No change excepting that there was practically no rain during the fortnight under review.

II. *The extent to which Government commitments have been curtailed during the fortnight under review giving details of* :—

(*a*) *Nature of the existing commitments* :—Rural rationing was abolished with effect from 28—12—47. The ration system continues only in the Pudukkottai Municipal Town and the ration is given at 8 ounces (4 ounces of rice and 4 ounces of wheat and/or millets) per adult and 4 ounces per child per day.

(*b*) *The nature of the commitment to be retained or given up* : The ration system continues in the Pudukkottai Municipal area only and 8 fair price shops two in Tirumayyam Taluk, one in Kulattur Taluk and five in Alangudi Taluk were opened.

(c) *Towns, etc., De-Rationed* :—All places except Pudukkottai Town were de-rationed.

(*d*) *Population involved* :—

Pudukkottai Town		Population.
Adults	...	43,740.
Children	...	10,376.

III. *Review of progress of procurement, receipts or exports under the basic plan, off-takes including changes, if any, in procurement price, scales and composition of ration and food control organisation* :—The procurement work was stopped from 28—12—47 as there was practically nothing to procure on account of the total failure of crops. The off-take during the fortnight was 78·8 tons of rice, 8.4 tons of wheat and 37.9 tons of maize. The composition of the ration has been changed from 8 ounces of rice to 4 ounces of wheat and/or maize per adult with effect from 16—1—48

IV. General review of supplies, movements and price in unrationed and de-rationed areas :—Eight fair price shops were opened in rural areas to supply to the really needy people on ration basis. Foodgrains are transported by trains and motor lorries. The price of paddy and rice has since risen in de-rationed areas.

V. General remarks and appreciation of implementation of revised food policy :—Though the prices of food-stuffs have increased after decontrol of ration in rural areas still people are able to get stocks of foodgrains. Of course poor people suffer much on account of the rise in prices of foodgrains.

II

FOR THE SECOND FORTNIGHT OF FEBRUARY, 1948.

I. Weather condition and crops prospects :— No change.

II. The extent to which Government commitments have been curtailed during the fortnight under review giving details of :—

(*a*) *Nature of the existing commitments :*—No change.

(*b*) *The nature of the commitments to be retained or given up :*—No change excepting that the ration system continues in the Pudukkottai Municipal area only.

(*c*) *Towns etc., de-rationed :*—All places except Pudukkottai Town were de-rationed.

(*d*) *Population involved :*—No change.

III. Review of progress of procurement, receipts or exports under the basic plan, off-takes including changes if any, in procurement price, scales and composition of ration and food control organisation :—No change excepting that the off-take during the fortnight was 74.7 tons of rice, 8.6 tons of wheat and 42 tons of maize.

IV. General review of supplies, movements and price in unrationed and de-rationed areas:—No change excepting that the price of paddy and rice has since risen in de-rationed areas.

V. General remarks and appreciation of implementation of revised food policy:—No change excepting that all people are able to get food-grains even after de-control of ration, in rural areas.

ROYAL INDIAN NAVY EXAMINATION.

An examination for selection of candidates for commissioned ranks (permanent cadre) of the Royal Indian Navy will be held at Allahabad, Bombay, Calcutta, Delhi, Madras and Nagpur on the first of June, 1948, and subsequent days. Candidates who qualify at the examination will appear before a Services Selection Board for final selection.

Age:—Candidates must have been born not earlier than the 2nd January, 1929, and not later than the 1st January, 1931.

Educational qualifications:—Matriculation or equivalent. Approximate cost of training to be borne by parent or guardian £116. Closing date for applications 1st April 1948. Application forms and full particulars from Secretary, Federal Public Service Commission, Council Chamber, NEW DELHI, or Naval Officers in charge of Bombay Cochin, Madras, Vizagapatam and Calcutta.

The Government of India have issued the following Memorandum in regard to the absorption of staff employed in States which have merged into Provinces:—

Memorandum No. 582 of 48, dated 15—3—48.

"The Government of India have stated that in the case of States which have merged into provinces, although no guarantee has been given to the staff employed in the States, the understanding has always been that the staff will be absorbed as far as possible on terms no less advantageous than received by them in the States".

The following Notification of the Government of India, is hereby republished.

Ministry of States.

New Delhi, the 10th March, 1948.

No. 156-1B.—Whereas the Central Government has full and exclusive authority, jurisdiction and powers for, and in relation to, the Governance of Pudukkottai State;

Now, therefore, in exercise of the powers conferred by sub-section (2) of section 3 of the Extra-Provincial Jurisdiction Act, 1947 (XLVII of 1947), and of all other powers enabling it in this behalf, the Central Government is pleased to delegate to the Government of Madras, the power conferred by the section 4 of the said Act to make orders for, or in relation to, the governance of the said State as respects any of the matters enumerated in List II or List III of the Seventh Schedule to the Government of India Act, 1935;

Provided that—

(i) the exercise of the power hereby delegated shall be subject to the control of the Central Government; and

(ii) the delegation shall not preclude the Central Government from exercising the power hereby delegated.

M. K. KIRPALANI,
Joint Secretary.

The Government of Madras have issued the following notification in regard to the change of weekly holidays from Friday to Sunday.

G. O. Ms. No. 744, dated 23—3—48.

"His Excellency the Governor of Madras hereby directs that the weekly public holiday now being granted in Pudukkottai be changed from Friday to Sunday with immediate effect".

Sri Brihadamba State Press, Pudukkottai, 460—6-4-48.



THE PUBLIC OFFICES



H. H. THE RAJA'S COLLEGE



THE GENERAL HOSPITAL

இணைப்பு.

புதுக்கோட்டை இந்திய யூனியனுடன் ஐக்கியமாகிவிட்டது.

பிப்ரவரி மாதம் 29-ம் தேதி, மாட்சி தங்கிய மன்னர்பிரானை ஆலோசனைகளுக்காக வரும்படி சமஸ்தான இலாக்கா மந்திரி சபையார் தந்தி கொடுத்தார்கள்.

28-ம் தேதி மாட்சி தங்கிய மன்னர், ஆகாய விமான மூலம் மதராஸிலிருந்து புறப்பட்டார்.

மன்னர் மார்ச் மாதம் 1-ம் தேதி சர்தார் படேலை சந்தித்தார். அவர் V. P. மேனனையும் சந்தித்தார்.

மன்னர் புதுக்கோட்டையை இந்திய யூனியனுடன் ஐக்கியப்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டார்.

மார்ச்மீ 3-ம் தேதி, காலை 11-45 மணிக்கு டவுன் ஹாலில் ஓர் தர்பார் நடைபெற்றது. திருச்சி கலெக்டர் ஸ்ரீ-V. V. சுப்ரமணியம் I. C. S., அவர்கள் தலைமை வகித்தார். திவான், இலாகா அதிகாரிகள், மற்றும் பல உத்தியோகஸ்தர்கள், உத்தியோக பற்றற்றவர்களும் வந்திருந்தார்கள்.

கலெக்டர் பேசுகையில், மன்னரவர்கள் புதுக்கோட்டையை இந்திய யூனியன் நாடுகளுடன் ஐக்கியப்படுத்துவதற்கு சம்மதித்துவிட்டதாயும், மதராஸ் கவர்ன்மெண்டாரின் சார்பாக நிர்வாகத்தை தான் ஒப்புக்கொண்டதாயும் கூறினார்.

பிறகு தர்பார் கலைந்தது.

மார்ச்மீ 4-ம் தேதி, மன்னரவர்கள் வெளியிட்ட ஓர் அறிக்கை தினசரிகளில் காணப்பட்டது. மன்னர் அதில் சர்தார் படேல், இணைப்பினால் ஏற்படும் நன்மைகளை அழுத்தமாக எடுத்துச் சொல்லி இணைப்பிற்கு இணங்கும்படி வற்புறுத்தி எடுத்துச் சொன்னதால்தான் அவர் இணைப்பிற்கு ஒப்புக்கொள்ள நேர்ந்தது என்று கூறியுள்ளார்கள். புதுக்கோட்டை மக்களை இந்திய யூனியனுடன் முழு மனதுடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

3-ம் தேதி சென்னைக்கு திரும்பி வந்த மன்னர் 5-ம் தேதி கோடைக்கானலுக்குப் புறப்பட்டார்.

மாதக் குறிப்புகள்.

புதுக்கோட்டை இந்திய யூனியனுடன் ஐக்யமாகிவிட்டது. மதராஸ் கவர்ன்மெண்டாரின் கீழ் ஸ்ரீ-C. கருணாகர மேனன் அவர்களால் நிர்வாகம் நடத்தப்பட்டுவருகிறது.

* * *

ரெவின்யூ போர்டு முதல் மெம்பர் ஸ்ரீ-V. N. குடுவா, I. C. S., அவர்கள், இணைப்பை உருவாக்குவதற்கு எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி ஆராய்ந்து அறிவிக்க, 4-ம் தேதி இங்கு வந்தார். அவர் தலைமை அதிகாரிகளையும், உத்தியோகப் பற்றற்ற சில முக்கியமான கனவான்களையும் சந்தித்தார். ஸ்ரீ-குடுவா, புதுக்கோட்டை பிரிவுபடாமல் ஓமே பிரதேசமாகச் செய்வதற்கு எடுத்துக்கொள்ளவேண்டிய சிலாக்கியமான முறைகளைப் பற்றி பலர் தெரிவித்த அபிப்பிராயங்களைக் கவனத்துடன் கேட்டுக்கொண்டார்.

இணைப்பினால் நியாய இலாகா சம்பந்தமாக ஏற்படும் மாறுதல்களைப் பற்றியும், முடிவான தீர்மானங்கள் உருவாகும்வரை—அது எவ்வளவு காலமாயிருந்தாலும் சரி—நீதி பரிபாலனம் செய்யவேண்டிய முறைகளைப் பற்றியும், 7-ம் தேதி இங்கு வந்த ஸ்ரீ-P. ராமலிங்கம், I. C. S., அவர்களுடன் சம்பாஷணைகள் நடத்தப்பட்டன. அவர் நீதிபதிகளையும், வக்கீல்களையும் சந்தித்தார்.

* * *

சமஸ்தானம் இந்திய யூனியனில் ஐக்கியமானதின் மூலம் வெகு காலத்திய ஓர் சமஸ்தானம் மறைகிறது. புதுக்கோட்டையின் நிர்வாகமானது, மக்களுக்கு சாதகமான முறையில் செவ்வனே நடத்தப்பட்டு வந்திருக்கிற விஷயம் எல்லோருமறிந்தது. தன் நல மற்றவரும், பரந்த நோக்கமுள்ளவருமான மன்னரவர்கள், வெகு துரிதமாக புதுக்கோட்டைக்கு பொறுப்பாட்சி வழங்க ஏற்பாடுகள் செய்தார். மன்னருக்கு அவரது பிரஜைகளின் நலத்தில் அவருக்குள்ள அக்கரையையும், முன்னறிவையும் பாராட்டி சர்தார் படேல் எழுதிய கடிதத்தை ஒருவரும் நினைக்காமல் இருக்க முடியாது.

தன் சாந்த சுபாவத்தாலும், மக்களிடம் கொண்டிருந்த பேரன்பாலும் தனது பிரஜைகளின் மனதைக் கவர்ந்த தங்கள் மன்னரை புதுக்கோட்டை மக்கள் ஒரு நாளும் மறக்கமுடியாது.

* * *

மார்ச்மீ 15-ம் தேதி மது விலக்கு மந்திரி கனம் டேனியல் தாமஸ் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்தார். அவர் பல உத்தியோகஸ்தர்களையும் உத்தியோகப்பற்றற்றவர்களையும் சந்தித்தார். வெகு துரிதமாக மதுவிலக்கு கொண்டுவருவதற்கு எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி ஆராய்வதற்காகவே இங்கு வந்தார். அவர் வெகு காலமாக நேர்த்தியாக நிர்வாகம் நடத்திவந்த புதுக்கோட்டை மக்களை, சந்தித்ததில் தான் மிகவும் சந்தோஷப்படுவதாகவும் இணைப்பினால் இந்தியாவுக்கும், புதுக்கோட்டைக்கும் பல நன்மைகள் ஏற்படுவது நிச்சயம் என்றும் கூறினார்.

மகாத்மா காந்தி—புகழ்மாலை.

Mr. எச். எஸ். எல். போலக் எழுதுகிறார் :—

மகாத்மா காந்தியை இழந்தது அவரை மதித்துப் போற்றும் உலக மக்கள் அனைவருக்குமே பெருத்த நஷ்டமாம். அவரிடம் நெருங்கிப்பழகி உடன் உழைக்கும் பேறு பெற்றவர்களுக்கு மாத்திரம் இல்லை. காந்தி என்று இருந்த சக்தி உண்மையில் அவர் நினைவைப் போற்றுபவர்க்கும் அவர் உபதேசித்த வழியில் தம்மால் இயன்றவரை செல்லவேண்டும் என்று நினைப்பவர்களுக்கும் பொதுவில் உள்ளதே.

அவை உலகப் பொது நலத்துக்கு உதவும் தன்மையன. வெளிப் படையாகத் தோல்வியாகத் தோன்றும் ஒன்றை நாம் ஆன்ம வெற்றியாக மாற்றிக்கொள்ளும் தைரியம் படைத்திருப்போமானால் அவர் விரும்பிய முடிவை நாம் அடைந்தவர் ஆவோம். தவறான வழியிலே செல்லும் மனித சமூகத்தை இன்னும் அறியப்படாத உன்னத நிலைக்கு உயர்த்தும் பெருமை யும் இந்தியாவுக்கு வாய்க்கும்.

குறிப்பு.—போலக் என்பவர் மகாத்மாஜீயின் துணையாளராகி உழைத்துத் தென்னாப்பிரிக்காவிலேயே சிறை சென்றவர்.

* * * *

ஸ்ரீமதி நல்லமுத்து ராமமூர்த்தி எழுதுகிறார் :—

சாமானிய மனிதர் மகாத்மா காந்தியின் ஆன்ம சக்தியை அளவிட இயலாது. நான் சாமானிய மனிதரினும் உயர்ந்த நிலையில் இருப்பதாக நினைத்துக்கொள்ளவில்லை.

நெடும்போர், அரும்போர் நிகழ்த்தி நம் நாட்டுக்கு அவர் வேறு எவரினும் விசேஷமாகவே சுதந்திரம் தேடி அளித்திருக்கிறார்.

உலகத்துக்கு அவர் ஒரு உபதேசம் தந்திருக்கிறார். புத்தர் என்ற ஞானமூர்த்தியும், இயேசு கிறிஸ்து நாதரும் அன்பே வெறுப்பை வெல்ல வல்லது என்பதைப் போதித்தார்கள் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் அவர்கள் உபதேசம் தனி மனிதனுக்கே பயன்படும். அன்பு, சத்தியாக் கிரகம் என்ற இரண்டையும் நாட்டு மக்கள் இடையே நிகழும் போர்களிற் பயன்படுத்த முதல் முதல் உபதேசித்தவர் காந்திஜியே. இந்தப் போதனை அணுகுண்டு எழுந்துள்ள இந்த நாளில் உலக மக்களுக்கு அவசியமேயாம். இனி எதன்பொருட்டு அவர் உயிரை விட்டாரோ அவ்வழிக்கு நாம் நம்மை அர்ப்பணம் செய்யவேண்டும்.

Mr. பெர்னாட் ஷா :

மிகவும் நல்ல ஆத்மாவாயிருப்பதில் உள்ள ஆபத்து காந்தியின் மரணத்திலிருந்து விளங்கியது.

* * * *

டாக்டர் ராதாகிருஷ்ணன் :

"நம்ப இயலாத செயல் நினைக்க இயலாத செயல் நிகழ்ந்துவிட்டது. நம் காலத்தில் மிகவும் பரிசுத்தமான, மிகவும் உத்தமமான ஒரு மார்க்க தர்சி ஒரு பித்துப் பிடித்தவன் கோபத்துக்கு ஆளாகவேண்டும் என்பது, நஞ்சுகுடிக்க நேர்ந்த சாக்ரடீஸ் நாள் முதல் சிலுவையில் அறையுண்ட இயேசுநாதர் நாள் முதல் இன்னும் நாம் திருந்தவில்லை என்பதையே விளக்குகிறது.

நம் கண் முன்னே காணுது மறைகின்ற இறந்த காலத்தின ஒரு தனிச்சின்னமாயிருந்த மகாத்மா காந்தி மறைந்தார். நாம் அவர் உடலை அழித்துவிட்டோம். ஆனால் மெய்ம்மையும் அன்புமே ஆகிய தெய்விக சக்தியின் உருவமாய் அவருள் இருந்த ஒளி எவரால அவிக்கப்படமாட்டாது.

* * * *

ஹாலிஃபாக்ஸ் பிரபு :

வேறு ஒருவரும் அவரினும் மிக்க உள்ளத்துணர்ச்சியோடு இந்தியாவுக்காக உழைக்கவில்லை. இந்தியாவிலும் பிற நாட்டிலும் உள்ள அவர் அன்பர்கள், மிகவும் வருந்தத்தக்க அவர் மரணத்தின் விளைவாக வந்த போதனை, அவர் எப்பொழுதும் ஓயாமல் மனமார உபதேசித்த நெறியில் நன்கு தெளிந்து நடப்பதே என்று அறிவார்கள் என நம்புவோம்.

தமது வாழ்வின் போக்காலும் உதாரணத்தாலும் தாம் வாழ்ந்த நாளின் மக்கள் மனத்தை இத்தனை அழுத்தமாக மாற்றி அமைக்க வல்ல திறமுள்ள பெருமக்கள் சரித்திரத்திலேயே அருமை என்று நினைக்கிறேன்.

* * * *

டாக்டர் ஃபிஷர் (காண்டர்பரி ஆர்ச்பிஷப்) :

மனித இனத்தை ஹிம்ஸையிலிருந்து அஹிம்ஸைக்கும் சகோதரத்துவத்துக்கும் இழுக்கவே அவர் தம் வாழ்வைப்பயன்படுத்தினர். மதவெறியும் வெறுப்பும் அவரையே அந்நெறிக்கு ஒரு பெரும் பலி ஆக்கிவிட்டது.

12—2—48உ தலைநகரில் நடந்த ஊர்வலத்தின் காட்சி.

By N. Hari Rao.



12—2—48உ தலைநகரில் நடந்த ஊர்வலத்தில் மகாத்மாவின் உருவப்படம் புஷ்ப ரதத்தில் செல்லும் காட்சி.

By S. V. Raman.



31—1—48உ தலைநகரில் நடந்த ஊர்வலத்தில் பொது ஜனங்கள் மகாத்மாவின் திருஉருவப்படத்தை புஷ்பரதத்தில், கடையக்குடி வெள்ளாற்றிற்கு எடுத்துச்செல்லும் காட்சி.

By N. Hari Rao.

12—2—48உ தலைநகரில் நடந்த ஊர்வலத்தில் கிருஸ்தவர்கள் வேதம் ஓதிவரும் காட்சி.

By S. V. Raman.

Mr. ஜின்னா :

எமக்குள் அரசியல் கருத்து வேற்றுமை எத்தனை இருந்தாலும், இந்து சமூகத்தால் தோற்றுவிக்கப்பட்ட மிகப் பெரிய மகான் அவர் என்பதில் ஐயம் இல்லை. இந்துக்கள் எல்லாரும் நம்பி மதித்த தலைவர் அவர். இந்துஸ்தானத்துக்கும் பாகிஸ்தானத்துக்கும் சுதந்திரம் பிறந்தவுடன் இத்தனை சமீப காலத்தில் சரித்திரப் பிரசித்தி பெறத்தக்க இந்த ஆபத்தான காலத்தில் இந்து சமூகமும் அவர் குடும்பமும் இத்தகைய பெரிய நஷ்டம் அடைந்ததற்கு நான் என் மனமார அவர்களுக்கு அனுதாபம் கூற விரும்புகிறேன். இந்திய நாட்டுக்கு உண்டாகிய நஷ்டம் பரிகரிக்க இயலாதது. இந்த நாளில் இத்தகையபெரியோர் இறந்ததால் உண்டாகிய இடைவெளியை நிரப்புவது என்பது அருமையே.

*   *   *

ஸ்ரீ ஓ. பி. இராமசாமி ரெட்டியார் :

காந்தி, மனிதர் இடையில் வாழ்ந்து அவர்க்குள்ள துயர்களையும் துன்பங்களையும் உணர்ந்து தன் உபதேசத்தாலும் வாழ்க்கையாலும் அவர்களுக்கு மெய்யறிவுதந்து அன்பு மிக்க தந்தையைப் போல தெய்வத்திருவருளின் அருகே அவர்களை அழைத்துச் சென்ற ஒரு பெரிய கருமயோகி. இத்தகைய பெருங்குணம் படைத்த நல்லோர் ஒருவர் இந்தியன் ஒருவனாற் கொல்லப்பட்டான் என்பது அவர்கள் எல்லாருக்கும் நாணமும் துக்கமும் தரும் செயலாகும். காந்திஜி இந்து மதத்தின் உண்மையான பிரதிநிதியாவர். எல்லா மதங்களாலும் போதிக்கப் பெற்ற உத்தமமான நெறிகளின் உருவமும் ஆவர். அவர் வாழ்வே ஜீவாத்மா ஓயாது உழைத்து பரமாத்மாவோடு ஒன்ற நினைக்கும் முயற்சிக்கு உதாரணமாம்.

*   *   *

டாக்டர் ஹென்றி ஃப் க்ரேடி (இந்தியாவில் அமெரிக்க ஸ்தானிகர்) :

எந்தப் பெரியோரையும் போல அவர் இந்தியா ஒன்றுக்கே உரியவர் இல்லை. அவர் எந்நாட்டவரும் ஆன நம் எல்லாருக்குமே உரியவர் ஆவர். இப்பெருந்துயர்ச் செய்தியால் அவர் வாழ்ந்த போது இருந்ததைக்காட்டிலும் இப்பொழுது அவர் ஆத்மசக்தி பெரிதாகி உலகத்துக்குப் பயன்படும் என்று நம் மனத்தைச் சமாதானம் செய்துகொள்ளலாம். மற்ற மகான்களின் மரணத்தில் விளைந்தது போல இன்றும் உலகம் அவரது நன்னெறிகளை இனிப்பின்பற்றி நடப்பதையே அவர் நினைவுக்கு ஒரு குறிப்பாக்கலாம். நாம் எல்லாருமே மனித சமூகத்தில சாந்தமும் சகோதாரத்வமும் நிலவ உழைக்கத்துணியலாம். நம் உள்ளத்திலிருந்து அயல் மனிதரிடம் நமக்குள்ள வெறுப்புப் பிணக்குக்களை ஒழிக்கலாம். நாம் இன்றும் விசேஷ ஊக்கத்தோடு அவர் கனாக்கண்ட, நிலை பெறுவிக்க நினைத்த நல்ல உலகத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவோம். மனிதரிடையும் நாட்டு மக்களிடையும் உள்ள வேற்றுமைகள் எல்லாம் மாறவேண்டும். உணர்ச்சியிருந்தால் வழி தானே பிறக்கும். உலக நலத்துக்காக உயிர் கொடுத்த எங்கள் நாட்டுப் பெரியோர் ப்ராங்கிளின் ரூஸ்வெல்ட் ஒரு முறை சொல்லியது போல 'கருதத்தக்கது மனவுணர்ச்சியே' என்பேன். மகாத்மா காந்தியின் மனவுணர்ச்சியே உலகமெங்கும் சமாதானம் நிலவவேண்டும் என்று அவர் முயன்ற முயற்சியும் கொண்ட லக்ஷியமுமே மனிதனுக்கு மனிதன் அன்பு காட்டவேண்டும் என்ற உணர்ச்சியே இப்பொழுது விஷயமாம்.

Mr. ஆல்பர்ட் இன்ஸ்டீன் (உலகப் பிரசித்த விஞ்ஞானி):

[காந்தியின் எழுபத்தைந்தாம் பிறந்த நாளன்று எழுதியது].

வெளிப்படையான அதிகார உதவி எதுவும் இல்லாத தன் நாட்டு மக்கள் தலைவர். தனது வெற்றி தந்திரச் சூழ்ச்சியாலும் அரசியல் தொழில் முறைகளினும் அமையப்பெறுது தனது வாழ்வின் தூய்மையிலேயே அமைந்த ஒரு அரசியல் வாதி, படை வலிமையைச் சிறிதும் பொருட்படுத்தாத வெற்றி மிக்க ஒரு பெரும் போர் வீரன், உறுதியும் மாறுபடாத ஒருமையுணர்ச்சியும் தாங்கி அறிவும் அடக்கமும் உள்ள ஒரு பெரியோன். தன் ஆற்றலையெல்லாம் தன் நாட்டு மக்களை உயர்த்தவும் அவர்கள் வாழ்வை நலம்படுத்தவும் முயன்ற புண்ணியன், ஐரோப்பாவின் மிருக பலத்தைத் தனது தனி மனித சக்தியால் எதிர்த்து நின்ற தீரன், இதனால் எல்லாக் காலத்துக்கும் உயர்ந்து எழுந்தவன், இனி வரும் மக்கள் பரம்பரை இத்தகைய நன் மகன் ஒருவன் உடம்போடு உலகில் நடந்தானு என்று நம்ப இயலாதவாறு வாழ்ந்த புண்ணிய மூர்த்தி.

* * * *

Mr. சி. இ. எம். ஜோட்., எம். ஏ., டி. லிட்., (லண்டன் சர்வகலாசாலை):

(வைராக்கியத்துக்கும் ஆத்மசக்திக்கும் ஆசாரியன்)

புலவர் ஷெல்லியின் வாக்குக்கு இணங்க "உயர் நாட்டம் உள்ள மனிதன் எப்பவன் நிகழ்காலத்திலே எதிர் காலத்தைப் பார்ப்பவன். அவன் எண்ணங்கள் வருங்காலத்தின் மலர்களுக்கும் கனிகளுக்கும் மூலங்களாம்." இவ்வுண்மையை ஜீவவர்க்க சாஸ்திர ரீதியில் பார்க்கும் போது மகாத்மா என்பவன் மனித இனத்தின் மனப்போக்கிலும் ஆத்மசக்தியிலும் நல்வளர்ச்சி பெற்ற பெரியோனுவன். வாழ்வின் உள் நோக்கங்களை வெளியிட வந்த பெரியோன் அவனே. ஆகவே, வாழ்வு, தனக்கு முன் உள்ள பழையன எல்லாவற்றையும் தள்ளி ஒதுக்கிப் புதிய அமைப்பு அமைக்க முயலும் முயற்சிக்குப் பிரதிநிதியாவான். பழைய நெறிகளை மாற்றிப் புது நெறி அமைக்க அதுவே அமைந்த வழியாம். பேரறிவாளன் முதலில் எடுத்துக் காட்டிய வழியைப் பற்றியே மனித சமுகத்தின் மனம் பின்னே மெல்ல நடக்கிறது. ஒரு காலத்தில் அவைதிகமாக நினைக்கப்பட்ட கொள்கைகள் மற்றொரு காலத்தில் பொதுப் பேச்சாக வந்துவிடும்.

இந்த நோக்கத்திலே காந்தி ஒரு சிறந்த மகான். பிணக்குக்களை ஒழிக்கப் போராட்டங்களை மாற்ற அவர் ஒரு புது வழி கூறுகிறார். அது படை தாங்கிப் போர் செய்யும் முறையை மாற்றுவதோடு நின்றுவிடவில்லை, ஒருவரை ஒருவர் அழிக்கும் துறையில் மனிதர் இன்றும் வளர்ந்து கொண்டே போகும் இந்நாளில் நாகரிகம் மிஞ்சவேண்டும் என்றால் போர் முறையை இவ்வமைதி நெறி வேன்றே ஆகவேண்டும். ஆனால் இன்று நம் கண் முன்னே அவர் பிடித்த வழி வெற்றி பெறவில்லை என்பது உண்மையே. அவர் தான் நடத்திவைக்கக் கூடிய அளவுக்கு மேல் எடுத்துக்கொண்டு விட்டார். ஆனால் பெருமக்கள் தாம் இயற்றவல்ல அளவுக்கு மேற்பட உயர் நெறி ஒன்றையும் எடுத்துரையாது ஒழிவாராயின் உலகமே பெரு கஷ்டம் அடையும். ஏனெனில் நாம் சித்தி பெறும் சீர்திருத்தம் எல்லாம் சித்தி பெறும் லக்ஷியங்களின் குழந்தையே. காந்தியே நம்பியதால் நாம் காந்தியை நம்புகிறோம். உலகத்தில் அவர் சக்தி படை வலிமையைத்துணை பெறுவிட்டாலும் மற்றெம் மனிதன் ஆற்றலையும் விடப்பெரிதே.

யோன் நோகுச்சி (டோக்யோ, ஜப்பான்):

1. காணகிலா வெற்றியினைக் கருதி யிறைதிரு முன்பு
கோணலிலா அறப்போரைக் குறித்து நிற்கும் பெருவீரன்
நாணமிலா நரகினிடம் நடுங்கவருங்குழலூதி
மாள வெதிர்காலமெலாம் வரவேற்பன் தனி நின்றே.

2. வாடியிளைத் திடுமுடலன் வற்றாதவுயிர் வலியன்
தேடி வருமுலகனைத்தும் செயலாலே திகைக்கவைப்பன்
நாடியின்ன பெருமகனால் நலம்பொலியா அன்புநெறி
நீடிய நன்னிலை பெறவே நிமிர்வதனைக் காணுகவே.

3. நெறிகெடவே பிறரழித்த நிறை வாழ்வினுரிமைகளும்
குறியறவே யிழிநிலைமை கொடுத்தவுடற் பணிகளுமே
அறிவுநிலை சிறந்த விந்த அறிவனது துணை படைத்து
வெறியடக்கு முறைகளையே வீழ்த்திவிட முயலுமன்றே.

4. நிலவுலகி னருகிருந்து நிறை மொழியைப் புகலுமிவன்
அலகினிலத் திவனை நிகர் ஆருளரே நாட்டன்பர்
நலமனைத்தும் வெறுத்துழைத்து நாடுவனே மெய்ம்மையினை
புலநெறியில் மிகுமிவனைப் போலுலகி லெவருளரே.

5. உலகுயிர்கள் படுந்துயர்த் துறுமெல்லை தனியுணர்ந்து
வலமுறவே வதனையெலாம் மாற்றுவது கருத்தாகி
நிலமனைத்தும் தனைநினைய நிமிர்ந்து நடந்திடுமோடுவன்
நலமனைத்தும் உளவிவனை ஞாலமினியடைவரிதே.

[இறைவன் அருகில் இருந்து கண்ணுக்கு எட்டாத தொலையில் உள்ள வெற்றிக் காட்சியை நினைந்து அறப்போர் புரியும் பெருவீரன்; நரகத்தின் ஆழ்ந்த எல்லையளவும் போய்க் கேட்கும் அறக்குழல் ஊதும் பெரு முயற்சியாளன்; எதிர்காலத்தைத் தருகவிடை என்று இறுமாந்து அழைத்து அறைகூவும் தனிப் பெருவீரன், உடம்பு இளைத்து வாடி இருப்பினும் ஆன்ம சக்தியில் ஒப்பு உயர்வு அற்று விளங்கி உலகமே நடுங்கச் செய்யும் உத்தமன், இந்த வீர வள்ளலால், போற்றாத புறக்கணிக்கப்பட்ட அன்பும் இந்த மனிதசிகாமணியால், அடக்கப்பட்டிருந்த வாழ்வின் உரிமையும் இந்த உயரிய உயிரால், முன்பு பெருமையிழந்து மட்கியிருந்த மெய்த்தொழிலும், அடக்குமுறைக்கும் கொடுங்கோன்மைக்கும் எதிர்முழக்கு முழங்கி இறைவன் நீதிக்கும் பாராட்டுக்கும் முன்வருகின்றன. நிலமகன் அருகிருந்தே வாழ்வின் உண்மைகளை இப்புண்ணியவன் எளிய முறையிலே முழங்கினன். இந்தப் பெருமகனிலும் சிறந்த நாட்டன்பன் எங்கே உளான், தன்னலத்தையும் இரவு ஒழிவையும் மறந்து உண்மையின் சிகரத்தைத் தனி நெறியே தேடிய இப்புண்ணியமூர்த்தியைக் காட்டிலும் சிறந்த ஞானமூர்த்தி எங்கு உளான்? பசியும் துயரும் மிக்க தனிப்பெருவழியிலே தனியே நடக்கும் இப்புண்ணியனைப் போன்ற புண்ணியரும் உண்டோ!]

டான் சால்வடார் டி மாடரிகா, எம். ஏ. (லண்டன்) :

(ஒருமையுணர்ச்சி ஊறிய வாழ்வு).

......ஆகவே இக்காலத்தின் பிரச்னை என்று செய்வதைக்காட்டிலும் வாழ்வதில் ஊறியிருக்கிறது. நாம் வேற்றுமை தோன்ற ஒன்றும் இயற்றவேண்டாம். நாமே மாறவேண்டும். உலகத்தை மாற்ற நினைத்தால், நாம் கைக்கொள்ளவேண்டிய திருத்தமுறை இதுவேயாம். ஏனெனில் உலகம் மாறவேண்டும் ; இல்லையெனில் உலகும் அழியும், அதனுடன் நாமும் அழிவோம். இந்த எண்ணம் நிறைவேற இரண்டு துணைகள் வேண்டும். உலக சமூகத்தின் தலைவராகிய பெருமக்கள் உள்ளத்தில் இந்த திருத்த நெறி உதயமாகவேண்டும். மக்களுட்பெரும் பகுதியார்க்கு இது போதிக்கப்படவேண்டும். முதலது மெல்லவே விளையும் ; ஆனால் கேவலம் அறிவைப்பற்றியதன்று. நாகரீகம்படைத்த உலகம் எங்கும் நாம் அதைப் பார்த்துக்கொண்டே இருக்கிறோம். வெளித்தோற்றம் வேறாக இருந்தாலும் சர்வாதிகார நாடுகளிலும் இக்காட்சி காண்கிறோம். இரண்டாவது, இன்னும் சிரமமான காரியம். ஏனெனில் வாழ்வின் நெறிகள் வாழ்வாலேயே காட்டப்படவேண்டும். வாழ்வின் ஒற்றுமையுணர்ச்சியை, ஒற்றுமையுணர்ச்சியிலே ஊறி வாழ்ந்த உத்தவாழ்வே காட்டவேண்டும் ; அத்தகைய வாழ்வே காந்தியின் வாழ்வாம். அதனாலே தான் நம் காலத்திலே மகாத்மா ஒரு பெரிய லக்ஷ்யபுருஷராக விளங்குகிறார். ஏனெனில் அவர் செய்கைக்கோ, நினைப்புக்கோ அத்தனை மதிப்புக்கொடுக்கவில்லை. வாழ்வே வாழ்ந்து காட்டினார்.

* * * *

M. ரோமேன் ரோலெண்டு

(மேல் நாட்டார் ஒருவர் காந்தியைப் பாராட்டுவது).

பலர்க்கு அவர் கிறிஸ்துவின் மறு பிறப்பாகத் தோன்றினார் மேல் நாட்டு நாகரீகத்தின் புதுக்கிளர்ச்சிகளால் வருந்திய அறநெறியால் அமைக்கப்பெறாத வாழ்வுள்ள, புதுமைகாணும் அறிவு தன் அழிவுக்கே தீட்டப்பெற்றிருக்கும் நிலையில் உள்ள அறிவின் செல்வர்களுக்கு காந்தி, ஜீன் ஜாக்ஸ் ரூசோ, டால்ஸ்டாய் என்ற இருவரின் புதிய அவதாரமாகத் தோன்றினார். அவர் முன்னைய இருவரைப்போலவே நாகரீகத்தின் குற்றங்களையும், அறியாமைகளையும் கண்டித்து, இயற்கை வாழ்வுக்கு, அடக்கமான வாழ்வுக்கு, நல்வாழ்வுக்கு மனிதன் வரவேண்டும் என்று போதித்தார். அரசாங்கங்கள் அவரை அவமதிக்கவும், குறைப்படுத்தவும் நினைத்தன. ஆனால் பொது



STATE MUSEUM.

மக்கள் அவரைத் தமது தோழராகவும், சோதரராகவும் நினைத்தனர். இங்கு ஸ்விட்சர்லாந்தில் அவர் இந்நாட்டு மக்கள், மலை மக்கள் இடையின் அவர் தோற்றுவித்த அந்தரங்க பக்தியை நன்கு அறிவேன்.

முன்னாளிலே கிறிஸ்தவ குரு பரம்பரைகளைக்கண்ட அர்ச், ப்ருதே அர்ச், ப்ரான்ஸிஸ் என்பவர் ஆன்ம சக்தியைப்போன்றே காந்தியின் ஆன்ம சக்தியும், மனிதர் கடக்கவேண்டிய குழப்பமும், மாற்றமும்மிக்க இக் காலத்தில் மனித இனத்தில் அன்பை ஒற்றுமையை நிறுத்துவதாக.

*   *   *   *

2

கவி ரபீந்திரர் (சாந்திநிகேதனம்):

மகாத்மா காந்தி வந்து இந்தியாவின் சுதந்திர மார்க்கத்தைத் திறந்த போது, அவர் கையில் வெளிப்படையான படை வலிமை ஒன்றும் இல்லை; பிறரை அடக்கவல்ல சக்தி ஒன்றும் இல்லை. அவர் ஆன்ம சக்தியினின்று எழுந்த உணர்ச்சியே சங்கீதம்போல, அழகுபோல, இன்பமயமாய் இருந்தது. பிறரிடம் அது பெற்ற உரிமை தன்னையே கொடுக்கும் தன்மை யால் மிகவும் அதிகமாகவே இருந்தது.

உலகம் இழந்த ஒளி

இழந்தனை யொளியை உண்மையின் விளக்கை எம்பெரும் பாரததேவி
இழந்தனை அறத்தின் பெருமலை யதனை இணையிலா அறிவர்மாமணியை
இழந்தனை யொருமை நெறியினை யெவர்க்கும் இனிதருள் நினதொரு மகனை
இழந்தனை நினது சிவமயவொளியை எங்ஙனே பொறுத்தனை அன்னையே
இழந்தனை அருளின் பெருநெறி விளக்கை எவருமெப்பொழுதுமே இணைய
இழந்தனை உலகிற் கொருபெரு மணியை எமக்கெலாம் புகழ்தரு மகனை
இழந்தனை உலகிற் கொருபெரு மணியை இசையொரு வடிவுள இவனை
இழந்தனை காந்தி யெனும் பெருமுருவை என்னையே பொறுத்திநீ அன்னையே
அன்னையர் மறந்த துயரமொன்றில்லை அவலமும் அளவிறப்பதனால்
நின்னையே யுலகம் நினைத்திடப்புரிந்த நிறைதவக் காந்தியை இழந்தும்
என்னையே பொறுத்தி நினதுள் வலிமை எவர்க்குள தன்னையே உலகம்
பின்னுமே பெறுதற் கரியவிப் பொருளைப் பெற்ற நின்றுயரனைப் பரிதே.

நா. கனகராஜன்.

புதுக்கோட்டை உணவு நிலைமை.

(1948-ம் வருஷம் பிப்ரவரி மீ முதல் பக்ஷத்தியது.)

1. சீதோஷ்ண நிலையும், பயிர் நிலைமையும் :—மாறுதலில்லை. ஆனால் பிரஸ்தாப பக்ஷத்தில் சிறிதளவும் மழையில்லை.

2, இந்தப் பக்ஷத்தில் கவர்ன்மெண்டாரவர்களால் குறைக்கப்பட்டுள்ள பொறுப்புகளும் அவைகளின் விபரங்களும் :—

(*a*) தற்போதுள்ள பொறுப்புகளின் தன்மை :—28—12—47 முதல் கிராம உணவு பங்கீடு முறை எடுக்கப்பட்டது. புதுக்கோட்டை முனிஸிபல் நகரத்தில் மாத்திரம் பங்கீடு முறை அமுலிலிருந்து வருகிறது. வயது வந்தவர்களுக்கு 4 அவுன்ஸ் அரிசியும், 4 அவுன்ஸ் கோதுமை அல்லது இதர தானியமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ ஆக 8 அவுன்ஸ் வீதமும், குழந்தைகளுக்கு 4 அவுன்ஸ் வீதமும் கொடுக்கப்பட்டு வருகிறது.

(*b*) வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்புகள், அல்லது விடுக்க வேண்டிய பொறுப்புகள் :—பங்கீடு முறை முனிஸிபல் எல்லைக்குள்பட்ட பிரதேசத்தில் மட்டும் அமுலிலிருந்துவருகிறது. திருமயம் தாலுகாவில் இரண்டு, குளத்தூர் தாலுகாவில் ஒன்று, ஆலங்குடி தாலுகாவில் ஐந்து ஆக எட்டு நாணய விலைக் கடைகள் திறக்கப்பட்டன.

(*c*) பங்கீடு முறை ரத்து :—புதுக்கோட்டை நகரத்தைத் தவிர பாக்கி இடங்களில் பங்கீடு முறை ரத்தாகிவிட்டது.

(*d*) பங்கீடுக்குட்பட்ட ஜனத் தொகை :—

நகர ஜனத் தொகை.

வயதானவர்கள்—43,740.

குழந்தைகள்—10,376.

3. சேகரிப்பு, ஏற்றுமதி, இறக்குமதி, தானிய இருப்பு வகையரா :—பெரும்பாலாக மகசூல் இல்லாததால் தானிய சேகரிப்பும் 28—12—47 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. பிரஸ்தாப பக்ஷத்தில் 78.8 டன்கள் அரிசியும், 8.4 டன்கள் கோதுமையும், 37.9 டன்கள் சோளமும் கைவசமிருந்தன. 8 அவுன்ஸ் அரிசி அரிசி கொடுக்கப்பட்டு வந்ததற்குப் பதிலாக 16—1—48 முதல் 4 அவுன்ஸ் அரிசியும், 4 அவுன்ஸ் கோதுமை, அல்லது சோளம் அல்லது அவை இரண்டும் சேர்ந்தோ கொடுக்கப்பட்டு வருகிறது.

4. பங்கீடு இல்லாத இடங்களிலும், பங்கீடு எடுக்கப்பட்ட இடங்களிலுமுள்ள விலைவாசிகள் வகையரா :—உண்மையாகத் தேவையுள்ளவர்களுக்கு

உணவுப் பொருள்கள் கிடைப்பதற்கு மூன்று தாலுகாக்களிலும் 8 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. பங்கீடு முறை ரத்தான இடங்களில் நெல், அரிசி இவைகளின் விலைகள் உயர்ந்துவிட்டன.

5. திருத்தியமைக்கப்பட்ட உணவு திட்டத்தைப்பற்றிய பொதுவான அபிப்பிராயங்கள் :—கிராமாந்திரங்களில் உணவுப் பங்கீடு முறை எடுத்ததிலிருந்து தானியங்களின் விலை உயர்ந்த போதிலும், ஜனங்களுக்கு போதிய அளவு தானியங்கள் கிடைத்துவருகின்றன. ஆனால் தானியங்களின் விலை உயர்வினால் ஏழை மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர்..

II

1948-ம் வருஷம் பிப்ரவரிமீ இரண்டாவது பக்ஷத்தியது.

1. சீதோஷ்ண நிலைமையும், பயிர் நிலைமையும்.—மாறுதல் இல்லை.

2. இந்தப்பக்ஷத்தில் ஈ-கவர்ன்மெண்டாரவர்களால் குறைக்கப்பட்டுள்ள பொறுப்புகளும், அவைகளின் விபரங்களும் :—

(a) தற்போதுள்ள பொறுப்புகளின் தன்மை :—மாறுதல் இல்லை.

(b) வைத்துக்கொள்ளவேண்டிய பொறுப்புகள் அல்லது விடுக்க வேண்டிய பொறுப்புகள்.—மாறுதல் இல்லை. புதுக்கோட்டை முனிஸிபல் எல்லைக்குட்பட்ட இடங்களில் மட்டும்தான் பங்கீடு முறை அமுலிலிருக்கிறது.

(c) பங்கீடு முறை ரத்து.—புதுக்கோட்டை நகரத்தைத் தவிர மற்ற இடங்களில் பங்கீடுமுறை எடுத்தாகிவிட்டது.

(d) பங்கீடுக்குட்பட்ட ஜனத்தொகை.—மாறுதல் இல்லை.

3. சேகரிப்பு, ஏற்றுமதி, இறக்குமதி, தானியம் இருப்பு வகையரா.—மாறுதல் இல்லை. ஆனால் இப்பக்ஷத்திய தானிய கையிருப்பு 74·8 டன்கள் அரிசி, 8·6 டன்கள் கோதுமை, 42 டன்கள் சோளமுமாகும்.

4. பங்கீடு இல்லாத இடங்களிலும், பங்கீடு எடுக்கப்பட்டுள்ள இடங்களிலுமுள்ள விலைவாசிகள் வகையரா :—மாறுதல் இல்லை. ஆனால் பிரஸ்தாப பக்ஷத்தில் நெல், அரிசி இவைகளின் விலை மிகவும் அதிகமாயிற்று.

5. திருத்தி அமைக்கப்பெற்ற பங்கீடு திட்டத்தைப்பற்றிய பொதுப்படையான அபிப்பிராயங்கள்.—மாறுதல் இல்லை. ஆனால் கிராமாந்திரங்களில் பங்கீடு முறை எடுத்தபின்பும் உணவுதான்யங்கள் வாங்கமுடிகிறது.

ராயல் இந்திய கப்பற்படை பரீக்ஷை.

ராயல் இந்திய கப்பற்படைக்கு கமிஷன்பெற்ற பதவிகளுக்காக (நிரந்தரமானது) நபர்கள் எடுப்பதற்கு ஓர் பரீக்ஷை, 1948-ம் ௵ ஜூன் ௴ 1-ம் தேதியன்றும், அதை அடுத்த தினங்களிலும் அலகபாத், பாம்பே, கல்கத்தா, டெல்லி, மதராஸ், நாக்பூர் ஆகிய இடங்களில் நடைபெறும். பரீக்ஷையில் தேர்ச்சி அடைந்தவர்கள் சர்வீஸ் செலக்ஷன் போர்டார் முன்பாக கடைசி தேர்தலுக்காக ஆஜராக வேண்டும்.

வயது.—பரீக்ஷைக்கு செல்பவர்கள், 1929-ம் வருஷம் ஜனவரி ௴ 2-ம் தேதிக்கு முன்பாகவோ, 1931-ம்௵ ஜனவரி ௴ 1-ம் தேதிக்கு பிறகோ பிறந்தவர்களாக இருக்கக்கூடாது.

படிப்பு.—மெட்ரிகுலேஷன் அல்லது அதற்குச் சமமுள்ள பரீக்ஷை தேறியிருக்க வேண்டும். தேர்ச்சி காலத்தில் ஏற்படக்கூடிய சிலவு சுமார் 116 ரூ-ஐ பெற்றோர்கள், அல்லது போஷகர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும். 1948-ம்௵ ஏப்ரல்௴ 1-ம் தேதிக்குள்ளாக விண்ணப்ப பாரங்களை அனுப்பப்படும். விண்ணப்ப பாரங்களும், பூரா விவரங்களும் கீழ்கண்ட இடங்களிலிருந்து பெறலாம்.

செக்ரட்டரி,
பெடரல் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்,
கவுன்ஸில் சேம்பர்,
நியூ டெல்லி.

பாம்பே, கொச்சின், மதராஸ், விசாகப்பட்டிணம், கல்கத்தா ஆகிய இடங்களிலுள்ள நேவல் ஆபீஸர்களிடமிருந்தும் பெறலாம்.

வார விடுமுறை நாட்கள் வெள்ளிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமையாக மாற்றி, மதராஸ் கவர்ன்மெண்டார் அடியிற்கண்ட நோட்டிபிகேஷன் வெளியிட்டிருக்கிறார்கள்.

G. O. MS. No. 744, dated 23—3—48.

"புதுக்கோட்டையில் இப்பொழுது வெள்ளிக்கிழமை வார விடுமுறை நாளாக இருப்பதிலிருந்து, இனிமேல் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாக மாற்றப்பட்டிருக்கிறது என்றும், இது உடன் காலத்திலேயே அமுலுக்கு வரும் என்றும், மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள்."

Sri Brihadamba State Press, Pudukkottai. 810—8-4-48.

வந்தேமாதரம் ! ஜெய் ஹிந்த் !!

தந்தி :- "ராஜா சோப்". தபால் பெட்டி நெ. 36.

நாகரீக உலகத்தில் மங்கையும், மகனும் விரும்புவது தூய ஆடை

(காரணம்)

"சுத்தம் சோறுபோடும்
சுத்தமே சுகம் தரும்"

அச்சுத்தமே

கடவுளுக்கு அடுத்தபடி மதிக்கவேண்டிய விஷயமும் ஆகும்.

இவைகளைப் பூர்த்திசெய்வது

"ராஜா சோப் ஒர்க்ஸின்"

"கங்கை பார் சோப்புகள்"

818 கீழ ராஜவிதி, புதுக்கோட்டை.

Published by the Publicity Officer, Pudukkottai State. Printed at the Sri Brihadamba State Press, Pudukkottai. All communications should be addressed to the Publicity Officer, Pudukkottai.